கோவையில் 2.49 லட்சம் பேர் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி செலுத்த தகுதியானவர்கள்

ஆட்சியர் தகவல்

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3 ஆவது தவணை கரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட அரசு மருத்துவமனை முதல்வர் அ.நிர்மலா.

கோவை, ஜன. 10: கோவையில் மருத்துவப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் என 2.49 லட்சம் பேர் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி (பூஸ்டர் தடுப்பூசி) செலுத்திக்கொள்ளத் தகுதியான பயனாளிகள் உள்ளனர் என்று ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்தார்.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி செலுத்தும் பணிகள் திங்கள்கிழமை தொடங்கியது.

இதனைத் தொடங்கிவைத்து ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் பேசியதாவது:

கோவை மாவட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதல் தவணை தடுப்பூசி 96.76 சதவீதம் பேருக்கும், இரண்டு தவணைகளும் 80.78 சதவீதம் பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளது. 15 முதல் 18 வயதுள்ள மாணவர்களில் 97 ஆயிரத்து 404 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து மூன்றாவது தவணையாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் திங்கள்கிழமை தொடங்கப்பட்டுள்ளன.

மருத்துவப் பணியாளர்கள் 85,554 பேர், முன்களப் பணியாளர்கள் 91,762 பேர், 60 வயதுக்கு மேற்பட்ட இணை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 72.112 பேர் என மொத்தம் 2 லட்சத்து 49 ஆயிரத்து 428 பேர் மூன்றாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியானவர்கள்.

இதில் முதல்கட்டமாக ஜனவரி 31 ஆம் தேதிக்குள் 70 ஆயிரத்து 955 பேருக்கு மூன்றாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ள கைப்பேசி வழியாக குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் கரோனா, ஒமைக்ரான் நோய்த் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவமனைகள், அரசு கரோனா சிகிச்சை மையங்களில் 5,300 ஆக்சிஜன் படுக்கைகள், 4,300 சாதாரண படுக்கைகள் என 9,800 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தவிர 129 கிலோ லிட்டர் திரவ ஆக்சிஜன் கொள்கலன், 31 ஆக்சிஜன் உற்பத்தி இயந்திரங்கள், 2,500 ஆக்சிஜன் செறிவூட்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வாளையார் சோதனைச் சாவடிகள் உள்பட அனைத்து சோதனைச் சாவடிகளிலும் 24 மணி நேரமும் பயணிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இரண்டு தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், கரோனா நோய்த் தொற்று பாதிப்பில்லை சான்று இருந்தால் மட்டுமே கோவைக்குள் அனுமதிக்கப்படுகின்றனர் என்றார்.

நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் அ.நிர்மலா, சுகாதாரத் துறை துணை இயக்குநர் பி.அருணா, மாநகர நகர்நல அலுவலர் சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். முன்னதாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் அ.நிர்மலா, உதவி இருப்பிட மருத்துவ அலுவலர் பொன்முடி, சுகாதாரத் துறை உதவி திட்ட அலுவலர் பரணிகுமார் உள்பட மத்துவர்கள், செவிலியர்கள் 3 ஆவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

பெரியார் ஈ.வெ.ரா. சிலைக்கு அவமரியாதை: எஸ்.பி.வேலுமணி கண்டனம்

கோவை, ஜன. 10: கோவையில் பெரியார் ஈ.வெ.ரா. சிலைக்கு அவமரியாதை செய்யப்பட்டிருப்பதற்கு எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவை மாவட்டம் வெள்ளலூர் பேரூராட்சி, பேருந்து நிலையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் ஈ.வெ.ரா.வின் திருவுருவச் சிலையைக் கடந்த 8 ஆம் தேதி இரவு சமூக விரோதிகள் அவமரியாதை செய்துள்ளனர்.

பெரியார் ஈ.வெ.ரா. தமிழ்நாடு மட்டுமின்றி உலக நாடுகளில் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். இவரது பகுத்தறிவு பிரசாரத்தால் தமிழகத்தில் பெண் உரிமை விடுதலை, விதவைகள் மறுமணம், இட ஒதுக்கீடு, ஜாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் அமைதல், தாழ்த்தப்பட்டோருக்கு உரிமைகள் கிடைத்தது, மூட நம்பிக்கைகளுக்கு எதிரான சுயமரியாதை விழிப்புணர்வு போன்றவை ஏற்பட்டுள்ளன.

அவரது சிலைக்கு செருப்பு மாலை அணிவித்து அவமரியாதை செய்து மிகவும் கண்டனத்துக்குரியது. இத்தகைய செயலை செய்த சமூக விரோதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். எனவே, காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்து சமூக விரோதிகளுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் தாக்கப்பட்டதைக் கண்டித்து போராட்டம்

பொள்ளாச்சி, ஜன.10: பொள்ளாச்சியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞரைத் தாக்கிய நபரைக் கைது செய்ய வலியுறுத்தி அவரது உறவினர்கள் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொள்ளாச்சி அருகே உள்ள ஆனைமலை மக்கள் சக்தி நகர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஹரிஹர சுதாகரன். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இவர் அதே பகுதியில் மேஜர் ராமசாமி என்பவரது தோட்டத்தில் பணியாற்றி வந்தார். அங்கிருந்து சில காரணங்களுக்காக வேலையை விட்டு நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதே தோட்டத்தில் பணியாற்றிய பெண்ணை ஹரிஹர சுதாகரன் காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவு ஹரிஹர சுதாகரன் அப்பெண்ணைப் பார்க்க தோட்டத்துக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. அப்போது தோட்டத்தில் பணியாற்றிய சிலர் ஹரிஹர சுதாகரனை மரத்தில் கட்டிவைத்து தாக்கினர். இதில் பலத்த காயமடைந்த அவர் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், ஹரிஹர சுதாகரனைத் தாக்கிய நபர்களைக் கைது செய்யக் கோரி அவரது உறவினர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் திங்கள்கிழமை ஈடுபட்டனர். நடவடிக்கை எடுப்பதாக பொள்ளாச்சி சார் ஆட்சியர் உறுதி அளித்ததையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.

தனியார் பள்ளியில் தடுப்பூசி முகாம்...

கோவை சொக்கம்புதூரில் உள்ள எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் அண்மையில் நடைபெற்றன. பள்ளி தாளாளர் ஆர்.ராஜவேலு, முதல்வர் ஜீவா செந்தில், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் செல்வகுமார் ஆகியோர் முகாம் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

பஞ்சாப் விவகாரம்: தவறான பிரசாரத்தில் ஈடுபடும் பாஜகவினர் மீது நடவடிக்கை கோரி காங்கிரஸ் மனு

கோவை, ஜன. 10: பிரதமர் மோடியின் பஞ்சாப் பயணத்தின்போது காங்கிரஸ் அரசு முறையான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கத் தவறியதாக, தவறான பிரசாரத்தில் ஈடுபடும் பாஜகவினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காங்கிரஸ் கட்சியினர் மனு அளித்துள்ளனர்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் மாநில செயலர் மயூரா எஸ்.ஜெயக்குமார் தலைமையில் கட்சி நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரிடம் ஒரு மனு அளித்தனர். அதில், பிரதமரின் பஞ்சாப் பயணத்தின்போது பஞ்சாப் மாநில அரசு உரிய பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டதாகக் கூறி வருகின்றனர். இதில் உண்மை யில்லை.

பிரதமரின் சாலை வழிப் பயணம் ஏற்கெனவே திட்டமிடப்படாமல் திடீரென நிகழ்ந்ததாகும். அப்படி முறையான பாதுகாப்பு இல்லாததாக பிரதமர் கருதினால் அதற்காக சிறப்பு பாதுகாப்புப் படையினர் மீதுதான் குறை சொல்ல வேண்டும். எனவே பஞ்சாப் தேர்தலுக்காக பாஜகவினர் செய்து வரும் இந்த பொய்ப் பிரசாரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கோவை மாநகர் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் கருப்புசாமி, மாநில பொதுச் செயலர் பச்சைமுத்து, விவசாய அணி மாநிலத் துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, வீனஸ் மணி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

அதேபோல், இதே கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் மூலம் மாநில ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு, வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.எம்.சி.மனோகரன், மாநில பொதுச் செயலர் கணபதி சிவக்குமார், முன்னாள் மேயர் ஆர்.வெங்கடாச்சலம், மாநிலச் செயலர்கள் வி.விஜயகுமார், கே.செல்வராஜ், ஆர்.காயத்ரி உள்ளிட்டோரும் கையெழுத்திட்டு மனு அளித்துள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளிக்கும் வாகனம்

மாநகராட்சி ஆணையர் தொடங்கிவைத்தார்

கோவையில் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளிக்கும் வாகனத்தை கொடியசைத்து தொடங்கிவைக்கிறார் மாநகராட்சி ஆணையர் ராஜகோபால் சுன்கரா. உடன், ஸ்வர்கா பவுண்டேஷன் நிர்வாகிகள்.

கோவை, ஜன. 10: தொற்றுக் காலத்தில் உடல் நலக்குறைவால் அவதிப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் இருக்கும் இடத்துக்கே சென்று சிகிச்சை அளிக்கும் வாகனத்தை மாநகராட்சி ஆணையர் அண்மையில் தொடங்கி வைத்தார்.

கரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளிக்கக் கூடிய சுரக்சா கேர் வாகன சேவையின் தொடக்க விழா புலியகுளத்தில் சுவர்கா பவுண்டேஷன் சார்பில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையர் ராஜகோபால் சுன்கரா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, சுரக்சா கேர் வாகன சேவையை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்த வாகனம், கோவை மாவட்டம் முழுவதும் பயணம் செய்து, மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடத்துக்கே சென்று அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள், மருத்துவ உதவிகளை வழங்கும். இந்த வாகனக் குழுவில் மருத்துவர், செவிலியர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்த சேவைக்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது.

தொடக்க விழாவில், ஸ்வர்கா பவுண்டேஷன் நிர்வாகி சொர்ணலதா, ஒருங்கிணைப்பாளர் குரு பிரசாத், மருத்துவர்கள் தரணிகா சந்திரசேகர், அனுபமா, செவிலியர் எலிசபெத், பிசியோதெரபி மருத்துவர் ஷெர்லி அஸ்வினி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாவட்டத்தில் 602 பேருக்கு கரோனா

கோவை, ஜன. 10: கோவையில் புதிதாக 602 பேருக்கு கரோனா நோய்த் தொற்று திங்கள்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 56 ஆயிரத்து 553 ஆக உயர்ந்துள்ளது. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த 2 பேர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தனர். இதன் மூலம் கரோனா நோய்த் தொற்றுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 2,526 ஆக உயர்ந்துள்ளது.

அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், கரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சைப் பெற்று வந்த 183 பேர் குணமடைந்து திங்கள்கிழமை வீடு திரும்பினர். மாவட்டத்தில் 2 லட்சத்து 51 ஆயிரத்து 132 பேர் கரோனாவில் இருந்து குணமடைந்துள்ளனர். தற்போது 2 ஆயிரத்து 895 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

---

kotak **கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : 27 BKC, C-27, G-பிளாக், பந்தரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்தரா (கிழக்கு), மும்பை - 400 051.
கிளை அலுவலகம் : கிளை முகவரி : கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், எண். 219, 1 வது தளம், அருணாச்சலம் சாலை, DB சாலை, R.S. புரம், கோயமுத்தூர் - 641 002. CIN : L65110MH1985PLC038137

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், கோட்டக் பேங்க் லிமிடெட் (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) - க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 20.11.2019 அன்று சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், 26.08.2019 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 2,55,93,851.83/- (ரூபாய். இரண்டு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து எட்னூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா எண்பத்து மூன்று மட்டும்) மற்றும் 27.08.2019 முதல் மேற்கொண்டு வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை 1). M/s மருவூர் அரசி மாடர்ன் ரைஸ் மில், உரிமையாளர் - திரு. C. தங்கராஜ், சர்வே எண். 90/2, படியாண்டிபாளையம், ராஜராஜேஸ்வரி பள்ளி அருகில், வீரணம்பாளையம், காங்கயம் - 638 701, 2). திருமதி. T மல்லிகா, 16/34, அய்யாசாமி காலனி, காங்கயம், வார்டு 6, ஈரோடு - 638 701, 3). திரு. T ரவி பிரகாஷ், பழைய எண். 15 B6, புதிய எண். 6/34, அய்யாசாமி நகர் காலனி, காங்கயம், வார்டு 6, ஈரோடு - 638 701, 4). திருமதி. அருக்காணியம்மாள், 16/34, அய்யாசாமி நகர் காலனி, காங்கயம், வார்டு 6, ஈரோடு - 638 701, ஆகியோரிடமிருந்து வசூலிப்பதற்காக, ''இருக்கின்ற இடத்தில்'' மற்றும் ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் திரும்ப பெறத்தகாத வகையில் என்ற அடிப்படையில் 2022 பிப்ரவரி 16-ம் தேதியன்று விற்பனை செய்யப்படவுள்ளன.

சொத்துக்களின் விபரங்கள், அடிப்படை விலை (இதற்கு குறைவாக சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது) மற்றும் டேவணித்தொகை உள்ளிட்ட விபரங்களாவன இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

லாட். எண்	விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள்	அடிப்படை விலை (ரூ.)	டேவணித் தொகை (ரூ.)
1.	சொத்து எண். 1 - திரு தங்கராஜ் என்பவருக்கு சொந்தமானது : ஈரோடு பதிவு மாவட்டம், காங்கயம் சார் பதிவு மாவட்டம், காங்கயம் தாலுக்கா, முன்பு காங்கயம் கிராமம், தற்போது வீரணம்பாளையம் கிராமம், ரீ சர்வே எண். 90/2, பழைய சர்வே எண். 1373B ல் அமையப்பெற்ற 9.59 ஏக்கர் பரப்பளவு கொண்ட விவசாயமற்ற இடம்., இதில் உள்ள 3.08 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும் பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது. எல்லைகள் : வடக்கு - ஆர் எஸ் எண். 90/2 ல் உள்ள கிழமேல் பாதை தெற்கு - ரீ சர்வே எண். 90/2 ல் உள்ள இடங்கள் கிழக்கு - ரீ சர்வே எண். 89/2 ல் உள்ள இடங்கள் மேற்கு - ஆர் எஸ் எண். 90/2 ல் உள்ள சின்னசாமி கவுண்டருக்கு சொந்தமான சொத்து, இவைகளுக்கு மத்தியில் உள்ள 3.08 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம். மேலும், ரீ சர்வே எண்கள். 90/2 & 90/3 (பழைய சர்வே எண். 1373D ல் உள்ள 2.12 ஏக்கர்) 2.12 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது. எல்லைகள் : கிழக்கு - இதன் மேற்குறிப்பிட்ட 2.12 ஏக்கர் இடம் தெற்கு - கிழமேல் சாலை வடக்கு - கிழமேல் சாலை மேற்கு - தென்வடல் சாலை இவைகளுக்கு மத்தியில் உள்ள 2.12 ஏக்கர் இடம். ஆக மொத்தம் 5.20 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய A C கூரை வேய்ந்த கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய பொதுப்பாதைகளை பயன்படுத்தும் உரிமை, சாலைகள் மற்றும் அனைத்து இதர வசதிகள் ஆகியன. இதனுடன் தற்போது மற்றும் வருங்காலத்தில் நிலத்துடன் அல்லது நிரந்தரமாக நிலத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து வழித்தட உரிமைகள் / மாமூல் உரிமைகள் ஆகியன.	3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்)	அடிப்படை விலையில் 10%

மின்னணு ஏலம் மூலம் அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன :
சொத்துக்கள் ஆய்வு - விருப்பமுள்ள நபர்கள் சொத்துக்களை 15.02.2022 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை ஆய்வு செய்து கொள்ளலாம்.
டேவணித்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி & நேரம் - 15.02.2022 மாலை 05.00 மணி வரை.

1. ஏல விற்பனை ''ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்'' மூலம் KMBL ன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரரான அஹமதாபாத், குஜராத் - 380 006 ல் அலுவலகம் கொண்ட M/s ஆக்ஷன் டைகர், உதவி எண்கள். திரு. ப்ரவீன் குமார் அவர்களை7961200515 / 9722778828 மற்றும் உதவிக்கான மின்னஞ்சல் முகவரி sales@AuctionTiger.net / praveen.thevar@auctiontiger.net வலைதளம் - www.auctiontiger.net மூலம் நடைபெறும்.
2. ஏல விற்பனை 2022 பிப்ரவரி 16-ம் தேதியன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை., முடிவுறு நேத்திற்கு கடைசி ஐந்து நிமிடத்தில் விலைகோரல் வைக்கப்படும் பட்சத்தில், தன்னியல்பான 5 (ஐந்து) நிமிடம் கால நீட்டிப்புடன் நடைபெறும்.
3. சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளி அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு அதிகமாதனாக இருக்க வேண்டும்., மேலும் தங்களது விலைப்புள்ளியை இந்திய ரூபாய். 50,000/- (ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும்) என்ற மடங்கில் அதிகரிக்க வேண்டும்.
4. சொத்துக்கள் அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. அடிப்படை விலைக்கு குறைவாக கோரப்பட்ட விலைப்புள்ளி நிராகரிக்கப்படுவதோடு, டேவணித்தொகையும் அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும்.
5. வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகையின் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்றவுடன் 24 மணி நேரங்களுக்குள் செலுத்த வேண்டும்., வாங்கிய தொகையின் மீதி 75% தொகையை வங்கியால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 (பதினைந்தாவது) வது நாள் அல்லது அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") தனது சொந்த அதிகாரத்தில் எழுத்து பூர்வமாக அதிகரிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும்., தவறும் பட்சத்தில், வாங்குபவரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளையும் வங்கி அபராதமாக கருதி கழித்துக்கொள்ளும். ஏலதாரர் உரிய காலக்கெடுவுக்குள் ஏலத்தொகையை 24 மணி நேரத்துக்குள் செலுத்த தவறும் பட்சத்தில், அவரது விலைப்புள்ளி ரத்து செய்யப்பட்டு அடுத்தபடியாக அதிகபட்ச விலைப்புள்ளி கோரியுள்ள ஏலதாரருக்கு சொத்தை வாங்க வாய்ப்பளிக்கப்படும்.
6. ஏலதாரர்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வங்கியின் வலைதளத்திலுள்ள தொடர்பை விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கும் ஏல செயல்முறைகளில் பங்கேற்பதற்கும் முன்பே பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. விலைப்புள்ளிகள் ஆன்லைனில் மட்டும் உரிய படிவ(ங்களில்) முறையாக நிரப்பப்பட்ட பொருத்தமான விபரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதர படிவங்களில் நிரப்பப்பட்ட / முழுமையற்ற விலைப்புள்ளிகள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.
8. அனைத்து விலைப்புள்ளிகளும் பின்வரும் KYC ஆவணங்களுடன் இருக்க வேண்டும்.
i). PAN அட்டை, ii). ஆதார் அட்டை/கடவுச்சீட்டு, iii). நடப்பு முகவரி சான்று, iv). மதிப்புறு மின்னஞ்சல் முகவரி, v). தொடர்பு எண்/கள் (அலைபேசி/தொலைபேசி) போன்றவை, மேற்சொன்ன ஆவணங்களின் ஒளிவருடப்பட்ட நகல்களை மேற்சொன்ன மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் மேற்கண்ட ஒவ்வொரு சொத்துக்கும் / ஒவ்வொரு இனத்துக்கும் எதிராக குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை ''Kotak Mahindra Bank Ltd'' என்ற பெயருக்கு கோயமுத்தூரில் செலுத்தத்தக்கவாறு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும்.
9. விருப்பமுள்ள ஏலதாரர்கள் டேவணித்தொகை சமர்ப்பித்ததற்கான சான்றை வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க வடிவில் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
10. ஜாமீன் பெற்று கடனளித்தவரிடமிருந்து அல்லது / சேவைதாரரிடமிருந்து தேவையான தகவல்களை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டியுள்ளதால், ஏலதாரர்கள் மதிப்புறு மின்னஞ்சல் முகவரியை கொண்டிருக்க வேண்டும்.
11. விருப்பமுள்ள உத்தேச ஏலதாரர்கள், மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான ஆன்லைன் / நேரடி பயிற்சிக்கு இதன் மேற்குறிப்பிட்ட விபரங்களில் சேவைதாரரை தொடர்பு கொள்ளலாம்.
12. எனினும், அதிகாரப்பூர்வ அலுவலரோ ("AO") அல்லது ஜாமீன் பெற்று கடனளித்தவரோ அல்லது சேவைதாரரோ ஏதேனும் தொழில்நுட்ப கோளாறு / மின் துண்டிப்பு போன்றவற்றுக்கு பொறுப்பல்ல.
13. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகை மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்ற தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் திருப்பி தரப்படும்.
14. விற்பனையானது, வங்கியின் உறுதிப்படுதலுக்கு கட்டுப்பட்டதாகும். கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு நிலுவையாக உள்ள தொகை முழுவதையும் மின்னணு ஏலத்துக்காக குறிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்துக்கு முன்பாக செலுத்தி விட்டால், விற்பனை நடத்தப்படமாட்டாது.
15. அதிகாரப்பூர்வ அலுவலரின் ("AO") சிறந்த அறிவுக்கும் தகவலுக்கும் எட்டிய வரையில் மேற்சொன்ன சொத்துக்களின் மீது வேறு எந்த வில்லங்கமும் இல்லை., எனினும், உத்தேச ஏலதாரர்கள் சொத்துரிமை / வில்லங்கங்கள் போன்றவை தொடர்பாக தங்களது சுய சிரத்தையுடன் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") மேற்சொன்ன அடமான சொத்து தொடர்பாக ஏதேனும் கடன் பொறுப்பு, வில்லங்கம் சொத்து வரி அல்லது அரசுக்கான மற்றும் இதர வரி நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அதற்கு பொறுப்பல்ல. சொத்துக்கள் ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ இருக்கின்ற மற்றும் வருங்கால வில்லங்கங்களுடனேயே விற்பனை செய்யப்படுகின்றன.
16. அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") எக்காரணமும் கூறாமல் ஏதேனும் விலைப்புள்ளி / விலைப்புள்ளிகளை (ஏதேனும் சொத்துக்கான) நிராகரிக்க அல்லது மின்னணு ஏலத்தை ரத்து செய்ய உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.
17. விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதலின் பேரில், அதிகாரப்பூர்வ அலுவலர் ("AO") வாங்குபவர் பெயரில் ''விற்பனைக்கான சான்றை'' வழங்குவார். முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள், பரிமாற்ற கட்டணங்கள், VAT, TDS, GST போன்றவற்றை வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
18. விற்பனையானது சர்ஃபாசி சட்டம் / விதிகள் 2002 ல் விவரிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதன் மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாகும்.
19. சொத்துக்கள் ஆய்வு உள்ளிட்ட ஏலத்திற்கான இதர மேல் விபரங்களுக்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் திரு. ஸ்ரீனிவாஸ் பொன்டுரி அவர்களை தொலைபேசி எண். 9885333460 & திரு. மல்போஸ் அவர்களை தொலைபேசி எண். 8940665674 அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 11.01.2022
இடம் : கோயமுத்தூர்

ஒப்பம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
கோட்டக் மஹிந்திரா பேங்க்

UCO BANK
HONOURS YOUR TRUST

பொள்ளாச்சி கிளை:
எண்.2, ASD புரம்,
பொள்ளாச்சி-642 002, தமிழ்நாடு.
போன் : 04259-233366, இமெயில் : pollac@ucobank.co.in

தங்க நகை ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியில் நகைக்கடன் பெற்று கடனுக்கான கெடு தேதி கடந்தும் அசல் மற்றும் வட்டி செலுத்தாத கீழ்கண்ட நபரின் நகைகளை ஏலம் விடுவதற்கான அறிவிப்பு இந்த அறிவிப்பு கண்டவுடன் அசல் வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து **28.01.2022** தேதிக்குள் செலுத்த வேண்டிய தொகையினை செலுத்தி நகைகளை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் கடனிற்கு ஈடான நகைகளை **29.01.2022 (சனிக்கிழமை) தேதி மாலை 4 மணி**யளவில் வங்கி அலுவலகத்தில் கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு கடன்தாரர் இறந்திருப்பின் அவர்கள் வாரிசுகளுக்கு பொருந்தும். ஏலத்தொகை கடன்தொகைக்கு ஈடாக இல்லையெனில் மீதித்தொகைக்கு கடன்தாரர் செலவிலேயே சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். ஏல நடவடிக்கைகளை மாற்றவோ அல்லது ஒத்திப்போடவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

வ. எண்	நகைக் கடன் எண்	கடன்தாரர் பெயர்	கடன் தேதி	மொத்த எடை கிராமில்
1.	19910610077160	தர்மராஜ்.T	02.01.2020	40.400
2.	19910610085622	தர்மராஜ்.T	15.09.2020	95.700
3.	19910610085646	தர்மராஜ்.T	15.09.2020	73.000
4.	19910610085653	தர்மராஜ்.T	15.09.2020	96.200
5.	19910610085660	தர்மராஜ்.T	15.09.2020	73.700
6.	19910610085677	தர்மராஜ்.T	15.09.2020	63.300
7.	19910610088609	தர்மராஜ்.T	24.12.2020	74.400
8.	19910610088623	தர்மராஜ்.T	24.12.2020	99.200
9.	19910610088913	தர்மராஜ்.T	11.01.2021	141.100
10.	19910610088920	தர்மராஜ்.T	11.01.2021	137.300
11.	19910610088937	தர்மராஜ்.T	11.01.2021	184.200

இடம் : பொள்ளாச்சி
தேதி : 06.01.2022

கிளை மேலாளர்
யூகோ வங்கி, பொள்ளாச்சி கிளை

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
VIJAYA DENA

ராமநாதபுரம் கிளை : எண். 1, மேஃபிளவர், சக்தி காம்பிளக்ஸ்,
நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயமுத்தூர்–641036
போன் : 0422–2322177, இ–மெயில் : vjrprm@bankofbaroda.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு
ஏல நாள் : 17.02.2022
ஏல நேரம் : மதியம் 02.00 முதல் மாலை 06.00 மணி வரை

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனைக்கான, விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 8(5) மற்றும் 9(1))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 8(5) மற்றும் 9(1)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்" "என்ன உள்ளனவோ அப்படியே" "எப்படி உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை/ முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கிளை : ராமநாதபுரம். கடன்தாரர்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்: திருமதி.S.N.சுமா, க/பெ.திரு.மதுசூதனன்.A.P, வசிப்பிட முகவரி: C512 குறிச்சி ஹவுசிங் யூனிட் பேஸ்–II, சிட்கோ அஞ்சல், குறிச்சி கிராமம், மதுக்கரை தாலூகா, கோயமுத்தூர்–641021 மற்றும் **திருமதி.மேகா.S.M,** க/பெ.திரு.வெங்கட்ரமணன்.G, வசிப்பிட முகவரி: C512 குறிச்சி ஹவுசிங் யூனிட் பேஸ்–II, சிட்கோ அஞ்சல், குறிச்சி கிராமம், மதுக்கரை தாலூகா, கோயமுத்தூர்–641021. **உத்தரவாதமளித்தவர்: திரு.மதுசூதனன்.A.P,** வசிப்பிட முகவரி: C512 குறிச்சி ஹவுசிங் யூனிட் பேஸ்–II, சிட்கோ அஞ்சல், குறிச்சி கிராமம், மதுக்கரை தாலூகா, கோயமுத்தூர்–641021.
மொத்த நிலுவைத் தொகை : ரூ.30,04,423/– 31.12.2021 தேதி வரை மற்றும் வட்டி மற்றும் பிற செலவுகள்.

சொத்து விபரம் : கோயமுத்தூர் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலூகா, குறிச்சி கிராம க.ச.எண்.185/2C, வார்டு எண்.1, குறிச்சி வீட்டு வசதிவாரிய இரண்டாம் கட்ட அலகில் (பேஸ் II) உள்ள C – 512 என் கொண்ட வீட்டின் **எல்லைகள்:–** 20 அடி கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, மனை எண்.519 க்கு வடக்கு, மனை எண்.513 க்கு மேற்கு, மனை எண்.511 க்குக் கிழக்கு இதன் நடுவே கிழமேல் வடபுறம் 30 அடி, கிழமேல் தென்புறம் 30 அடி, தென்வடல் மேல்புறம் 40 அடி, தென்வடல் கிழபுறம் 40 அடி ஆக உள்ள 1200 சதுர அடி அல்லது 2 சென்ட் 329 சதுர அடி நிலத்துடன் அங்குள்ள RCC தார்சு கூரைக் கட்டிடமும், அதன் பிற வசதிகளும், அதாவது மின்சார இணைப்பு அதன் காப்புத்தொகை, குடிநீர் இணைப்பு மற்றும் லேஅவுட் ரோடுகளின் உபயோக உரிமை ஆகியன சேர்ந்த் சொத்து, குறிச்சி நகராட்சி எல்லைக்குள் உள்ளது.

நிர்ணய விலை : ரூ.41,00,000/–. முன் வைப்புத் தொகை: ரூ.4,10,000/–. குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ.40,000/–

ஏலத் தேதி / நேரம்	17.02.2022 மதியம் 02.00 மணி முதல் மாலை 06.00 வரை
ஆன்லைனில் ஏலக்குறிப்பீடு சமர்ப்பிக்க கடைசி தேதி / நேரம்	16.02.2022, மாலை 5.00 மணி வரை

முன்வைப்புத் தொகை (EMD) வசூலிப்பு கணக்கு எண்.75280015181219, Account Name : New Intermediary Account. IFSC Code : BARBOVJRPRM

சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம் : காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை (முன் அனுமதியின் பேரில்)

தொடர்பு எண். : 9384091617 ; நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://ibapi.in** (வங்கி சொத்துக்களின் மின் ஏலத்திற்கான பொதுவான தளம்) மற்றும் **https://www.bankofbaroda.in/e-auction.htm** இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் மின் ஏலத்தின் சேவையாளரின் **www.mstcecommerce.com** இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 11.01.2022
இடம் : கோயமுத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com